திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தச் சாலை என் தொகுதி திருச்செந்தூர் தொகுதியில் உள்ள சாலை, இந்த செம்மரிகுளம்—தேரி குடியிருப்பு சாலை, நன்கு காற்று அடிக்கும்போது அந்த ரோடு மண்ணால் மூடி விடுகிறது. ஆகவே அது மக்களுக்குப் பயன்படும் வகையில் இருக்க அந்த ரோடின் உயரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

Houses for Revenue Officials in Salem

*736 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the State Housing Board to construct houses for the members of the Salem District Revenue Officials Association ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) குறைந்த வருமான தொகுதியினருக்காக 103 வீடுகளும் நடுத்தர வருமான தொகுதியினருக்காக 2 வீடுகளும் கட்டும் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருக்கிறது. மேற்படி வீடுகள் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு, பல கட்டங்களில் இருக்கிறது.

தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடுகள்.

* 737 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் வட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திருப்பத்தூரில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை

* 738 வினா— திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பீடி தொழிலாளர் அதிகமாய் உள்ள திருப்பத்தூர் வட்டத்தில், தொழிலாளர் நல மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருப்பத்தூர் வருவாய்க் கோட்டத்தில, கீழ்க்காணும் மூன்று இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1. குடியாத்தம்.

2. வாணியம்பாடி.

3. ஆம்பூர். (இம்மருந்தகம் 22—3—75 ஆம்-நாளன்று தொடங்கிவைக்கப்படும்.)

பீடித் தொழிலைச் சார்ந்த தொழிலாளர்கள் தற்போது தொழிலாளர் நலக் காப்புறுதி திட்டத்தின் கீழ் வரவில்லை.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் அவர்கள் கொண்டுவரப்படுவாராயின், அந்நாளில் அவர்கள் மேற்சொன்ன விடங்களிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுடன் சேர்க்கப்படுவர்.

திரு. அ. ஆறுமுகம் : பீடித் தொழிலாளர்கள் உள்ள பகுதிகளில் எல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ? அதேபோல் என் எடப்பாடி தொகுதியில் பீடித் தொழில் நிரம்ப இருக்கிறது. ஆகவே, அங்கும் இதேபோல் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது மருத்துவமனைகள் பற்றிய கேள்வி. வீடுகள் பற்றிய கேள்வி அல்ல. ஆகவே தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. எ. வகாப் : வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிலும் முக்கியமாக இப்படிப்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் அது நிச்சயமாக மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். ஆகவே பீடித் தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவ உதவி அளிப்பதற்கு அரசு இந்த மருத்துவமனைகளை ஈடுபடுத்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது சம்பந்தமாக தென் இந்திய தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாடு மைசூரில் நடைபெற்றபோது இதுபற்றி விவாதித்தோம். இந்திய அரசுக்கும் இதுபற்றியெல்லாம் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இன்னும் இதுபற்றி பாக்டரி ஆக்டின் கீழ் வருமா இல்லையா

என்பது போன்ற விஷயங்களில் முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்னைகளில் முடிவு எடுக்கப்பட்ட பிறகுதான் இ. எஸ். ஐ.-யில் அவர்களைச் சேர்ப்பதா இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்த பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களை காச நோய் விரைவில் பற்றிக் கொள்கிறது. இந்தத் திட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் சேர்க்கப் படவில்லை என்று சொன்னார்கள். ஆகவே அரசாங்கம் அவர்களையும் இந்தத் திட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா? அப்படி நடவடிக்கை எடுக்கும் போது நெல்லை மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையம், முக்கூடல் இந்த இரண்டு இடங்களையும் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படி நடவடிக்கைகள் எடுக்கும்போது இந்த ஊர்களை எல்லாம் கவனத்தில் கொண்டு செயலாற்றும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அண்மையில் மத்திய அரசு விதித்த ஒரு வரி காரணமாக இந்தத் தொழிலில் ஒரு மிகுந்த நெருக்கடி ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஏற்கனவே நோயால் பீடிக்கப்பட்ட இந்த மக்கள் அன்றாடம் பிழைப்பையும் இழந்துவிட்டால் மிகுந்த அல்லலுக்கு ஆளாவார்கள். எனவே, இவர்களுக்கு தனியாக ஒரு திட்டத்தை வகுக்க தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது அப்படிப் பட்டதொரு திட்டம் அரசின் ஆய்வில் இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் இந்த அரசு அவர்களுக்கு தக்கப் பாதுகாப்பு அளிக்கத் தயங்காது.

டாக்டர் ச. அ. சின்னராசு : பீடித் தொழிலாளர்கள் ஈட்டுறுதி மருத்துவ மனையில் சேர்க்கப்படாத ஒரு சூழ்நிலை இருப்பதாகச் சொன்னார்கள். அந்த பீடித் தொழிலாளர்களுக்கு காச நோய் வருவதற்கு வாய்ப்பிருப்பதால் அவர்கள் குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது கட்டாயமாக மெடிக்கல் செக் அப் செய்து கொள்ளவேண்டும் என்று ஆணை பிறப்பித்து அவர்களது நலன்கள் அரசால் கவனிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது நல்ல யோசனை. ஆனால் தற்போது நிதிநிலை இதற்கு இடம் கொடுக்கவில்லை.

Executive Subordinates of Fisheries Department

*719 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Fisheries Executive Subordinate Association has presented a Memorandum containing their demands on 5th October 1974 ;

(*b*) if so, what those demands are ; and

(*c*) the action taken thereon by the Government?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Ferro-Cement boats

*720 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government propose to build fishing boats with Ferro-Cement ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) ஆம்.

(இ) மீனளத்துறையின் இரும்பு சிமிட்டிப் படகு ஆராய்ச்சி நிலையம் ஏற்கனவே 38 அடி படகு ஒன்றையும் 15 அடி படகு ஒன்றையும் கட்டி முடித்துள்ளது. 38 அடி நீளமுள்ள இன்னும் 10 படகுகளைக் கட்டும் பணி பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றது. 31, 32 அடி இரும்பு சிமிட்டி படகு கட்டும் திட்டம் அரசின் கருத்தில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, I am given to understand that the best and cheapest boats can be built with Ferro-Cement. So may I know from the Hon. Minister whether more boats will be built with Ferro-Cement?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, நான் சிறிது விளக்கமாக அவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த 'பர்ரோ சிமெண்ட்' படகு கட்டுவது ஆசியா கண்டத்திலேயே இரண்டாவதாக நாம் தான் கட்ட ஆரம்பித்து இருக்கிறோம். இதைக் கட்டுவதற்கு செலவும் சிக்கனம். அதே நேரத்தில் கடலில் செலுத்துவதற்கு, செலுத்து கிற நேரத்திலே தீப்பிடித்து பாதகம் ஏற்படாத வகையில்